O.S. No: 131/2021

பெயர் :குருமூர்த்தி

**வா.சா.1**

19-06-2024

**குறுக்கு விசாரணை**

நான் 10 வகுப்பு வரை படித்திருக்கிறேன். நான் துபாய் Properties நிறுவனத்தில் Properties controler ஆக வேலை பார்க்கிறேன். எனக்கு எழுத படிக்க தெரியும். இந்த வழக்கு என் அம்மாவை பவர் ஏஜென்டா போட்டு தாக்கல் செய்த வழக்கு என்றால் ஆமாம். என் அம்மா பவர் ஏஜென்டாக இருக்கும் நிலையில் என் அம்மாவை விசாரிக்காமல் இருப்பதற்கு வேறு காரணம் எதுவும் இல்லை . என்னிடம் காட்டப்படுவது என்னுடைய திருமண சான்றிதழ் நகல் என்றால் சரி . அது **பி.சா.ஆ. 1 ஆகும்.** என்னிடம் காட்டப்படுவது என்னுடைய சகோதரர் பிரதிவாதியின் பாஸ்போர்ட் நகல் என்றால் சரி. என் தம்பி தற்போது வெளிநாட்டில் இருக்கிறாரா என்று தெரியாது. நானும் என் சகோதரரும் வெளிநாட்டில் இருக்கும் போது இருவரும் சேர்ந்து ஒரு மனை வாங்கினோம் என்று என் வழக்குரையில் சொல்லியுள்ளேன் என்றால் சரி . வழக்குரை பாரா 1 -இல் நானும் என் சகோதரரும் சேர்ந்து வீட்டு மனை வாங்கியதாக குறிப்பிட்டுள்ளேன் என்றால் சரி . அதற்கான பத்திரம் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. வீட்டு மனை வாங்கும் போது என் தம்பி வெளிநாட்டில் இருந்தார் என்றால் அப்பொழுது அவர் இங்கு தான் இருந்தார் . அதனால் தான் நான் பணம் கொடுத்து அவர் பெயரில் வாங்கினோம். நான் என் தம்பிக்கு வங்கி கணக்கு மூலமாக கொடுத்த பணமா என்றால் என் கையில் இருந்து என் தம்பியிடம் நான் பணம் கொடுத்தேன். அப்பொழுது நான் கோயம்புத்தூரில் ஆஸ்பத்திரியில் இருந்தேன் . நான் பணம் என் தம்பியிடம் கொடுத்துவிட்டு தான்ஆஸ்பத்திரிக்கு போனேன் . நானும், என் தம்பியும் உள்நாட்டில் இருக்கும் போது ஏன் என் தம்பி பெயரில் கிரையம் பெறப்பட்டது என்றால் என் தம்பி பெயரில் லோன் எடுக்க வேண்டும் என்பதற்காக அவர் பெயரில் கிரையம் பெறப்பட்டது . அதன்பிறகு நான் அந்த வீட்டில் எனக்கும் பங்குள்ளது என்று ஏதாவது வழக்கறிஞர் அறிவிப்பு அனுப்பினேனா என்றால் இல்லை. நானும் அந்த வீட்டில் இருந்ததால் உறவினர்களை வைத்து பேசினோம் .

என் தம்பி வெளிநாட்டில் இருந்து சம்பாதித்து அவர் பெயரில் வாங்கிய வீட்டை ஏமாற்றி பணம் பறிப்பதற்காக இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. வா.சா.ஆ.1 உறுதிமொழி பத்திரம் கடனுறுதி சீட்டு அல்ல என்றால் சரி . இதில் எதற்காக பணம் தரவேண்டும் என்பதற்கு கருத்துவேறுபாடு என்று மட்டும் தான் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரி. இந்த பத்திரத்தை வாங்கிவந்தது நான் தான் என்றால் ஆமாம். இதில் கீழ்கண்ட சொத்தில் என்னை தவிர என் அண்ணனுக்கோ அல்லது அவரது வாரிசுகளுக்கோ எந்தவித பாத்தியமும் உரிமையும் கிடையாது என்று குறிப்பிட்டது குணசேகரன் தான் என்றால் சரி. ஆனால் அந்த வார்த்தை அவர் பணம் கொடுத்த பிறகு தான் அவ்வாறு வரும். இந்த பத்திரத்தை வரைவு செய்தது யார் என்ற விவரம் இல்லை என்றால் சரி . முதலில் ஒரு பேப்பரில் எழுதி பின்னர் தட்டச்சு செய்துக்கொண்டு வந்து கையெழுத்து வங்கினேன் . வா.சா.ஆ.1 இல் உள்ளது என் தம்பியின் கையெழுத்து அல்ல என்றாலும் , நான் அவரிடம் மோசடியாக பணம் பறிக்கவேண்டும் என்ற எண்ணத்தில் இவ்வாறு கட்சி செய்கிறேன் என்றால் சரியல்ல. நான் வழக்கு தாக்கல் செய்வதற்கு முன்னர் வழக்கறிஞர் அறிவிப்பு ஏதேனம் அனுப்பினேனா என்றால் இல்லை. இரண்டு மூன்று முறை நேரில் போய் கேட்டேன். அவர் கொடுக்காததால் வழக்கு தாக்கல் செய்தேன் . நான் வழக்கறிஞர் அறிவிப்பு அனுப்பியிருந்தால் அதில் உள்ள கையெழுத்து தன்னுடையதல்ல என்று மறுத்துவிடுவார் என்பதால் தான் அறிவிப்பு அனுப்பவில்லை என்றால் சரியல்ல . உறுதிமொழி பத்திரம் எழுதும் காலத்தில் தொகை ரூபாய் 12 லட்சம் என்ற நிலையில் நான் அதை பதிவு செய்யவில்லை என்றால் இவ்வாறு கருத்துவேறுபாடு ஏற்படும் என்று நான் நினைக்கவில்லை. இது தயார் செய்த ஆவணம் என்பதால் தான் நான் அதை பதிவு செய்யவில்லை என்றால் சரியல்ல. வா.சா.ஆ.1 இல் என்னுடைய ஆதார் எண்ணோ, பிரதிவாதியின் ஆதார் எண்ணோ குறிப்பிடாமல் இது முழுமையான ஆவணமாக இல்லாமல் உள்ளது என்றால் சரியல்ல. பத்திரம் எழுதும் காலத்திலேயே எங்களுக்குள் பிரச்சினை ஏற்பட்டுவிட்டதா என்றால் நான் வேறு வீடு கட்டிக்கொள்கிறேன் என்பதால் பணம் தருவதாக பேசிக்கொண்டோம் . கருத்துவேறுபாடு என்பது எனக்கும் என் தம்பி பிரதிவாதிக்கும் இடையே ஏற்பட்ட

கருத்துவேறுபாட்டை குறிக்குமா என்றால் குடும்பத்தில் ஏற்பட்ட கருத்து வேறுபாடு மற்றும் எனக்கும் என் தம்பிக்கும் உள்ள கருத்து வேறுபாட்டை குறிக்கும் . எனக்கு சேரவேண்டியது 12 லட்சம் என்று எவ்வாறு தீர்மானித்தோம் என்றால் மொத்த செலவில் இருந்து தீர்மானித்தோம் . வீட்டிற்கான வரவு செலவு ஆவணங்கள் உள்ளதா என்றால் அம்மா பெயரில் அனுப்பி தம்பிதான் கட்டினான் என்பதால் ஆவணங்கள் அனைத்தும் அவனிடம் தான் உள்ளது . நான் என் தம்பி வீட்டை அபகறிக்கு வேண்டும் என்ற எண்ணத்தில் இந்த ஆவணத்தை தயாரித்து தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல . வா.சா.ஆ.5, வா.சா.ஆ.1 நான் இந்த முகவரியில் தான் இருக்கிறேன் என்பதற்கான ஆவணம் ஆகும் . இது முதன்முதலாக எடுத்து ஆதார் தான் . இதற்கு முன்னர் வேறு ஆதார் அட்டை எடுக்கவில்லை . சரியாக நாபகமில்லை. 2013 இல் எடுத்திருப்பேன் . ஆதார் அட்டை எடுத்த போது எனக்கு திருமணமாகிவிட்டது. என் திருமண சான்றில் 5/50, செங்குந்தர் வீதி, அய்யாவாடி, நாச்சியார்கோவில் என்று தான் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரி அப்பொழுது என்னிடம் ஆதார் அட்டை இல்லை . பாஸ் போர்ட் Address -ஐ வைத்து தான் திருமணத்தை பதிவு செய்தேன். என் பெயரில் வேறு சொத்து உள்ளது. தாவா சொத்து வாங்குவதற்கு முன்பே இந்த இடம் வாங்கிவிட்டேன் . நான் என்னிடத்தில் வீடு கட்டாமல் என் தம்பி இடத்தில் வீடு கட்டியதாக வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. அது வீடு கட்டுவதற்கு சரியான இடம் இல்லை. பல தாக்காக இருந்ததால் தான் தம்பி பெயரில் வாங்கி கட்டினேன் . வா.சா.ஆ.1 வங்கி பாஸ் புத்தகம் 2013 வரை உள்ளது என்றால் சரி . அதில் துபாய் முகவரிதான் போடப்பட்டுள்ளது என்றால் அது NRI Account. இதில் யாருக்கு எதற்கு பணம் அனுப்பினேன் என்ற விவரம் உள்ளதா என்றால் என் பணத்தை எடுத்து செலவு செய்துள்ளார்கள் என்பதை காண்பிக்க தாக்கல் செய்துள்ளேன் . வா.சா.ஆ.3 இல் உள்ள முகவரியும், திருமண பதிவு சான்றில் உள்ள முகவரியும் வேறு வேறு என்றால் சரி. என் திருமண பத்திரிக்கை வழக்கிற்கு ஆதரவாக என்னால் தயாரிக்கப்பட்டது என்றால் சரியல்ல . வா.சா.ஆ. 10 என்னுடைய பவர் ஏஜென்ட் மனு செய்து பெற்ற ஆவணம் என்றால் சரி . பவர் ஏஜென்ட் கொடுக்கும் விவரங்கள் தான் இதில் இடம்

பெறும் என்றால் சரி. இந்த வழக்கே என் தம்பியிடமிருந்து பணம் பறிக்க வேண்டும் என்ற நோக்கத்துடன் பொய்யாக தாக்கல் செய்யப்பட்டது என்றால் சரியல்ல . உறுதிமொழி பத்திரத்தில் முதல் பக்கத்தில் இடது பக்கத்திலும் , இரண்டாம் பக்கத்தில் வலது பக்கத்திலும் கையெழுத்து போட்டிருக்கிறேன் என்றால் சரி. நான் தயார் செய்த பத்திரம் என்பதால் தான் முன்னுக்கு முரணாக உள்ளது என்றால் சரியல்ல . இதில் உள்ள கையெழுத்துக்கள் எதுவுமே என் தம்பியின் கையெழுத்து இல்லை என்றால் சரியல்ல.

Sd (xxxx)

Types to my dictation in open Court, read over and interpreted to the witness. Admitted and acknowledged by him/her to be correct.

Sd (xxxx)
Additional District Judge,
Fast Track Court,
Kumbakonam.

/True Copy/

Sd (xxxx)
Additional District Judge,
Fast Track Court,
Kumbakonam.